## தீவிரவாதத்துக்கு எதிரான போரில்

# தமிழ்நாடு இந்திய இராணுவத்துடன் நிற்கிறது!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, மே 8-

“தீவிரவாதத்துக்கு எதிரான போரில் தமிழ்நாடு இந்திய இராணுவத்துடன் நிற்கிறது'' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**தீவிரவாதத்துக்கு எதிரான போரில் தமிழ்நாடு இந்திய இராணுவத்துடன் நிற்கிறது.**

**நமது இராணுவத்தினருடன், நமது நாட்டுக்காக, தமிழ்நாடு உறுதியாக நிற்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.5.2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, தான் எழுதி முதலமைச்சர் அவர்களால் சென்னையில் 17.5.2025 அன்று வெளியிடப்படவுள்ள “தேசியக் கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை” என்ற நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

## ‘எல்லோருக்கும் எல்லாம்’ என எல்லாருக்குமான அரசாக இருக்கும்

# திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

## சென்னையில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் – பத்திரிகையாளர்கள் சந்திப்பில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மே 8 -**

**திராவிட மாடல் அரசு அமைந்து 4 ஆண்டுகள் நிறைவாகும் நிலையில், முதலமைச்சர் அவர்கள் தலைமையில், ஊடகவியலாளர்கள் - பத்திரிகையாளர்கள் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் திராவிட மாடல் அரசின் சாதனைகளை, மக்களிடம் எடுத்துச் சொல்வதுடன், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஊடகங்களின் ஆக்கப்பூர்வ ஆலோசனைகள் - கருத்துகளை வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்தித்து உரையாற்றுவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய அனைத்து அதிகாரிகளும், அமைச்சர்களும் அவர்களின் துறை சம்பந்தமாக என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன, என்னென்ன பணிகள் நடந்திருக்கின்றன என்பவற்றைப் பற்றி இங்கு விரிவாக எடுத்துரைத்தனர். அத்துடன் விளையாட்டு மேம்பாட்டுத்துறையில், நமது அரசு செய்திருக்கும் சாதனைகள் மற்றும் கொண்டு வந்திருக்கும் திட்டங்கள் குறித்து, உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

### தமிழ்நாடு முதலிடம்

எப்படி மற்ற அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதலிடத்தை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறதோ, அதேபோல விளையாட்டுத் துறையிலும் இந்திய ஒன்றியத்திலேயே முதலிடத்தை நோக்கி நம் தமிழ்நாடு சென்று கொண்டு இருக்கிறது. அதற்கு மிகமிக முக்கியமான காரணங்களை மட்டும் இங்கு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

`தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன்' என்ற திட்டத்தை 2023-ஆம் ஆண்டு நம் முதலமைச்சர் அவர்கள்தான் தொடங்கி வைத்தார். நாட்டிற்கே முன்மாதிரியான திட்டம் அது. முதலமைச்சர் தொடங்கி வைத்து, அவரே அந்த திட்டத்திற்கு தனது சொந்த நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாயை நன்கொடையாகக் கொடுத்தார். அதைத் தொடர்ந்து ஏராளமான நிறுவனங்கள், அமைப்புகளில் இருந்து நிதி உதவிகளைப் பெற்றோம்.

விளையாட்டு வீரர்களுக்குப் பொதுவாக அவர்கள் வெற்றி பெற்றவுடன்தான் ஊக்கத்தொகை கொடுப்போம். ஆனால், முதன்முறையாக விளையாட்டு வீரர்கள் ஒரு நாட்டிற்கு விளையாடச் செல்கிறார்கள் என்றால், அவர்களின் பயணச்செலவு, தங்கும் செலவு, விளையாட்டு உபகரணங்கள் எல்லாம் வாங்குவதற்கான செலவு முழுவதையும் நம் அரசே, தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன் மூலமாக ஏற்றுக்கொண்டது.

### வெற்றிவாகை சூடினர்

இதுவரை கிட்டத்தட்ட 680 விளையாட்டு வீரர்களுக்கு 17 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக உதவி செய்தோம். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம் பயன்பெற்ற வீரர்கள் 100-க்கும் அதிகமான தேசிய மற்றும் சர்வதேசப் பதக்கங்களை வென்று வெற்றிவாகை சூடியிருக்கிறார்கள் என்று பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னொரு முக்கியமான திட்டம், விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக செய்யப்பட்டது பார்த்தீர்கள் என்றால், விளையாட்டு வீரர்கள் வீட்டில் படிக்கிறார்கள் என்றால், அவர்கள் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஆனால், அவர்கள் விளையாடச் செய்கிறார்கள் என்றால், இவனின் எதிர்கால வாழ்க்கை போய்விடுமே, வேலை கிடைக்குமா என்று யோசிப்பார்கள்.

அதற்குதான் நம் முதலமைச்சர் அவர்கள் 3 சதவிகித இடஒதுக்கீட்டை சரியாக நடைமுறைப்படுத்துங்கள் என்று சொன்னார்கள். விளையாட்டை ஒரு கெரியராக தேர்ந்தெடுத்தாலும் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையை விளையாட்டு வீரர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் வேலைவாய்ப்புத் திட்டத்தை எடுத்தோம்.

### அரசு வேலைவாய்ப்பு

இதற்கான அரசாணை 2019-ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதில் 3 பேருக்கு மட்டும்தான் வேலைவாய்ப்பை கொடுத்திருந்தார்கள். இதையடுத்து, நம் முதலமைச்சர் அவர்கள் இதை சரியாகச் செய்யுங்கள் என்று உத்தவிட்டார்கள். ஆகவே, சென்ற ஆண்டு சட்டபேரவையில் நான் பேசும்போதே சொன்னேன். 100 விளையாட்டு வீரர்களுக்கு ஒரு வருடத்தில் வேலை வாய்ப்பைக் கொடுப்போம் என்று சொன்னேன். கிட்டத்தட்ட 104 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை நாம் கொடுத்து இருக்கிறோம்.

இந்த ஆண்டு இன்னொரு உறுதிமொழியும் கொடுத்து இருக்கிறோம். 25 மாற்றுத்திறனாளி வீரர்கள் உட்பட குறைந்தது 100 விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்று உறுதி அளித்து இருக்கிறோம்.

### 1,821 வீரர்களுக்கு 60 கோடி ரூபாய்

அதேபோல் உயரிய ஊக்கத் தொகை, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றிபெறும் தமிழ்நாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து உயரிய ஊக்கத்தொகை கொடுத்து இருக்கிறோம். சென்ற ஆண்டு மட்டும் 1,821 வீரர்களுக்கு 60 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை கொடுத்திருக்கிறோம். இவ்வளவு பெரிய தொகை வேறு எந்த ஆட்சியிலும் கொடுத்தது கிடையாது.

### மிகமிக முக்கியம்

கடந்த நான்கு ஆண்டுகளில் 4,650 வீரர்களுக்கு 150 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெறுகின்ற மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு நமது சாதாரண விளையாட்டு வீரர்களுக்கு எவ்வளவு உயரிய ஊக்கத்தொகை கொடுக்கிறோமோ, அதே அளவு மாற்றுத்திறனாளி வீரர்களுக்கும் கொடுக்கிறோம். இதை முதலமைச்சரின் தனி கவனத்திற்கு எடுத்துச் சென்று செயல்படுத்தி வருகிறோம். இப்படி வழங்கப்படுவது தமிழ்நாட்டில் மட்டும்தான். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது.

### நான்கு மடங்கு அதிகம்

விளையாட்டிற்கான உட்கட்டமைப்புகளை உருவாக்குவது. ஒரு நல்ல விளையாட்டு வீரன் உருவாக வேண்டும் என்றால், அவன் பயிற்சி பெறுவதற்கு, அவனின் திறமையை வெளிக்காட்டுவதற்குத் தகுந்த உட்கட்டமைப்பு வேண்டும். ஆகவேதான், நம் அரசு விளை யாட்டுத்துறைக் கட்டமைப்பை மேம்படுத்துவதில் மிகமிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்த நேரத்தில் ஒரு சின்ன புள்ளிவிவரத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற ஆட்சியாளர்களின் காலத்தில் 2011-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை உள்ள 10 வருட ஆட்சியில் வெறும் 348 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும்தான் விளையாட்டுத்துறைச் சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி இருந்தார்கள். ஆனால், நம் ஆட்சியில் இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 545 கோடி ரூபாய் அளவிற்கு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. இது அவர்களை விட நான்கு மடங்கு அதிகம்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் மூலமாக பல திட்டங்கள் நிறைவேற்ற ப்பட்டுள்ளன. அதில் ஒரு சில விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

`உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்' என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டம் 2022-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவர்களின் தொகுதியில் இருக்கின்ற மிக முக்கியமான 10 கோரிக்கைகளை அனுப்புங்கள் என்று, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் வைத்தார்கள்.

### பணிகளில் கட்சி சார்பு இல்லை

முதலமைச்சர் அறிவிக்கும்போது 1,000 கோடி ரூபாய் இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. கடந்த இரண்டு வருடத்தில் மட்டும் 14 ஆயிரத்து 740 கோடி ரூபாய் மதிப்பில் 1,253 பணிகள் தமிழ்நாடு முழுக்க உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணிகள் எல்லாம் எந்தக் கட்சி சார்பாகவும் இல்லாமல், அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளிலும் இந்த வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றது.

முதலமைச்சரின் மனதிற்கு மிகமிக நெருங்கிய திட்டம்தான் நான் முதல்வன் திட்டம். அதில், கல்லூரி மாணவர்கள் என்ன படிக்க வேண்டும், அவர்கள் படித்தால் மட்டும் பத்தாது. அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் உருவாக்கிக் கொடுக்கின்ற திட்டம்தான் `நான் முதல்வன் திட்டம்'. அந்த நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு அறிமுகப்படுத்திய திட்டம் அது. முன்பெல்லாம் மற்ற மாநிலங்களுக்குச் சென்று பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகள் இருப்பார்கள். ஆனால், இப்போது அவை குறைந்து விட்டன.

### 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை

2020-2021-ல் யு.பி.எஸ்.சி தேர்வில் வெற்றி பெற்றவர்கள் வெறும் 27 பேர்கள்தான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அதனால்தான் நான் முதல்வன் போட்டித்தேர்வு பிரிவினை நாம் தொடங்கினோம். அதில் இருப்பவர்கள் அனைவருக்கும் நாம் ஊக்கத்தொகை கொடுத்தோம். முதல் நிலை தேர்வுக்குத் தயாராகின்ற மாணவர்களுக்கு மாதம் 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத்தொகை கொடுத்தோம். அதேபோல் முதன்மைத் தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை கொடுத்தோம். தற்போது நான் முதல்வன் தங்குமிடங்களை ஏற்பாடு செய்திருக் கிறோம்.

இந்தப் பிரிவு தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே 47 மாணவர்கள், தமிழ்நாட்டில் இருந்து யு.பி.எஸ்.சி தேர்வில் வெற்றிபெற்று இருக்கிறார்கள். வருகின்ற வருடங்களில் அது 100, 200 ஆக வேண்டும் என்பதுதான் முதலமைச்சரின், நம் அரசின் ஒரே திட்டம்.

எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், அங்கு இருக்கின்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களை அழைத்து, அவர்களின் ஒவ்வொரு தேவையையும் அறிந்து அதைச் செயல்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதுதான் முதலமைச்சரின் அறிவுரை.

### இலக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய்

நம் அரசு அமைந்த முதல் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக 20 ஆயிரம் கோடி ரூபாய் இலக்கு நிர்ணயித்து, அந்த இலக்கை அடைந்தோம். 2023-ஆம் ஆண்டில் அது 30 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தினோம். சென்ற ஆண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பாகக் கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு எங்களுக்கு முதலமைச்சர் கொடுத்திருக்கின்ற இலக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய். கண்டிப்பாக அதையும் நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

`நம் அரசு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், மாணவர்கள் இப்படி அனைவருக்குமான ஒரு திராவிட மாடல் அரசு என்று நம் முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போதே, `எல்லோருக்கும் எல்லாம்' என எல்லாருக்குமான அரசாக இருக்கும்' என்று சொன்னார்.

ஆகவே, ஊடகங்கள் இந்தச் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். உங்களின் நியாயமான விமர்சனங்கள், கருத்துகள், பாராட்டுகள் இப்போதும் அதை உள்வாங்கி கொண்டுதான் முதலமைச்சர் அவர்களும், நம் அரசு அதிகாரிகளும் செயல்பட்டு வருகின்றனர்.

இன்று நான்கு ஆண்டுகள் முடிந்து, நாளை ஐந்தாவது வருடத்தில் அடியெடுத்து வைக்கின்ற நம் அரசு, இந்த நேரத்தில் உங்களை எல்லாம் சந்திக்கிறது. இந்தச் சிறப்பான கூட்டத்தை ஏற்பாடு செய்து உங்களை எல்லாம் முதலமைச்சர் சந்திக்கிறார். எனவே, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக நாம் எல்லோரும் ஒன்றாக உழைப்போம் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் பேரூர் கழகத்தில் தி.மு.கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க துவக்க விழாவை முன்னிட்டு கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு துண்டு பிரசுரம் மற்றும் இனிப்புகள், சாதனை விளக்க புத்தகத்தை பொதுமக்களிடம் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பேரூர் கழகச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு. விசுவநாதன், பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் கு.ஓம் சிவசக்திவேல்.மற்றும் ஒன்றிய, நகர நிர்வாகிகள், வார்டு, கிளை கழக செயலாளர்கள், மூத்த முன்னோடிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடு போற்றும் நான்காண்டு இது தொடரட்டும் பல்லாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய கழக செயலாளர் சி.எல்.ஞானசேகரன், பகுதி செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, தயாள்ராஜ், ஆர்.இ.பி.சசிக் குமார், பாலமுரளி கிருஷ்ணா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.தேவராஜ், இளைஞர் துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார், துணை அமைப்பாளர் முரளிபாஸ்கர் மற்றும் ஒன்றிய ,நகர, பகுதி ,பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.